Industries நிறைந்து போய்விட்டன. அடுத்து, தருமபுரியை நோக்கித்தான் தொழிற்பேட்டைகள் வருவதற்குண்டான வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால், பெங்களூருக்கு அடுத்து ஒசூர், ஒசூருக்கு அடுத்து பர்கூர், பர்கூருக்கு அடுத்து தருமபுரி. தருமபுரிக்குத்தான் அடுத்து வர வாய்ப்பிருக்கிறது. Industries Department–ன் Secretary–ம் அதற்குத் தயாராகயிருக்கிறார்கள். Environmental Clearance–ஐ பெறுவதற்கான கோப்பை அனுப்பிவிட்டால்கூட, நாம் இந்தத் தொழிற்பேட்டையை ஆரம்பித்துவிடலாம் என்ற முடிவில் இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் நிச்சயமாக அந்தத் தொழிற்பேட்டையை ஆரம்பிப்பதற்குண்டான நடவடிக்கைகளை உடனடியாக அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

16—

கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்

***61058—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் நகராட்சிப் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சவாலான பணிகளில் சாதனை படைப்பவர்களைப் பாராட்டுகிறபோது சிக்ஸர் அடித்துவிட்டார்; சிக்ஸர், சிக்ஸராக அடிக்கிறார் என்று பாராட்டுவது உண்டு. ஆனால், விரைவில் நடைபெறவிருக்கிற தேர்தல் களத்தில் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும் opening batsmen–ஆக களமிறங்கி out ஆகாமல் not

2021 பிப்ரவரி 5]

out batsmen ஆக கடைசி வரை விளையாடி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அரசிற்குத் தேவையான *234* run–களையும் பெற்று, மூன்றாவது முறையாக மாண்புமிகு அம்மா அரசு hat–trick வெற்றியைப் பெறுகிற சரித்திரத்தைப் படைப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நாளை தமிழக மக்கள் ஆர்வத்தோடு, மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

(அ) மற்றும் (ஆ) பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் நகராட்சிப் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு பவானிசாகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். ஈரோடு மாவட்டம், பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி, சத்தியமங்கலம் நகராட்சிப் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் துவங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. எஸ். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழ் பூமியை அரசாண்ட ஆலயத்து தெய்வம், சிப்பிக்குள் தவமிருந்து முத்துக்கள் பிறப்பதுபோல சங்கத் தமிழ் பூமிக்கு சேவையாற்ற அவதரித்து, சந்தனமாய் கரைந்திட்டு மறைந்து வாழும் தாயே! எங்கள் உயிரிலும், உதிரத்திலும், உணர்விலும் கலந்திட்ட தாயே! எங்கள் மனங்களில் மட்டுமல்ல, தமிழர்கள் ஒவ்வொருவரின் மனதிலும் நீங்காத இடம் பெற்று வங்கக் கடலோரம் துயில்கொள்ளும் என்னை வாழவைத்த தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகழுக்கு புகழ் சேர்க்கும்வண்ணம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நினைவு மண்டபம் திறப்பு விழா, மாண்புமிகு அம்மா அவர்கள் வாழ்ந்த வேதா நிலையத்தை அரசுடைமையாக்கி திறப்பு விழா, மாண்புமிகு அம்மா அவர்களின் 9 அடி வெண்கல திருவுருவச் சிலை திறப்பு விழா மற்றும் மாண்புமிகு அம்மா அவர்களின்

பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றப் பாதையில் கொண்டுசென்று மாண்புமிகு அம்மா அவர்களின் கனவுகளை நனவாக்க வேண்டும் என்பதற்காக மக்கள் நலன் சார்ந்த திட்டங்களைத் துரிதமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் காவேரி காப்பாளன், கொங்குநாட்டுச் சிங்கம், குடிமராமத்து நாயகன், தமிழக முதல்வர் எடப்பாடியார் அவர்களின் பொற்பாதம் பணிந்து பணிவோடு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நங்கூரம் பாய்ச்சிய கப்பலைப் போல அமைதியுடனும், பொறுமையுடனும், மன உறுதியுடனும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தனைகளுக்கும், செயல் வடிவங்களுக்கும் ஆக்கத்தையும், ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளித்து உறுதுணையாக இருந்துவரும் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களையும் பணிந்து வணங்குகிறேன். எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து எங்களை வழிநடத்திச் செல்லும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் K.A.S. அவர்களையும், தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் K.C.K. அவர்களையும் பணிந்து வணங்குகிறேன்.

பவானிசாகர் தொகுதி, தாளவாடி வட்டம், சத்தியமங்கலம் மலைப் பகுதி, கடம்பூர், திங்களூர் பகுதிகளில் நீண்ட காலமாக இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருந்தது. தற்போது இப்பகுதி மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசாணை வழங்கிய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பவானிசாகர் ஆற்றின் குறுக்கே ஏழு இடங்களில் தடுப்பணைக் கட்ட நிதியுதவியும், கீழ்பவானி பிரதான வாய்க்கால் கரையின் இருபுறமும் concrete lining அமைக்க நிதியுதவியும், பவானி ஆறு மாசுபடுவதைத் தடுக்கும் விதமாக 'நடந்தாய் வாழி காவேரி' திட்டத்தின் மூலமாக பணிகளை விரைவில் மேற்கொள்ள நிதியுதவியும் வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, கீழ்பவானி பிரதான வாய்க்கால்மூலம் பாசனம் பெறும் ஆயக்கட்டு நிலங்களை வேளாண்மை மண்டலமாக அறிவிக்க பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் நகராட்சிப் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்

2021 பிப்ரவரி 5]

அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சத்தியமங்கலம் நகராட்சி, நெசவாளர்கள் அதிகமாக வாழ்ந்துவரும் பகுதியாகும். இப்பகுதியைச் சுற்றி மலைவாழ் மக்கள், ஏழையெளிய மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதி மக்கள் அதிக பயன்பெறும் வண்ணம் சத்தியமங்கலத்தில் கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலத்தில் இயங்கி வந்த கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் இலாபகரமாக இயங்காத நிலையில் 1997–1998 ஆம் ஆண்டு மூடப்பட்டுவிட்டது. இருப்பினும், சத்தியமங்கலம் நகராட்சிப் பகுதியில் கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் துவங்குவதற்கு உகந்த கட்டட வசதி கிடைக்குமென்று சொன்னால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று மறுபரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைப்பதற்கான தகுந்த இடம் மிக விரைவிலே தேர்வு செய்து வழங்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதி, புஜங்கனூர் மற்றும் அரசூர் ஆகிய பகுதிகளில் நெசவாளர்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் 150–க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவுத் தறிகளை வைத்துள்ளார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் விதமாகவும், கைத்தொழிலை மேம்படுத்தும் விதமாகவும், தொழிலுக்குத் தேவையான நூல், பாவு, பட்டு, சாயப் பொருட்கள், அச்சு, cotton, jacquard box, *தறி மேடை ஆகிய மூலப்பொருட்களை எளிதில்*

பெறுவதற்கும், நெசவாளர்களை ஊக்குவித்து வேலைவாய்ப்பு வழங்குவதற்கும் புஜங்கனூர் மற்றும் அரசூரில் புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க ஆவன செய்ய அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மேலும், பவானிசாகர் தொகுதி, உருதுபாளையம் கிராமம், பண்ணாரி–பவானிசாகர்–புஞ்சைபுளியம்பட்டி சாலையில் குறும்பாளையம் கிராம புல எண்கள் 372/1, 2, 4 ஆகியவற்றில் பண்ணாரி அம்மன் டெக்ஸ்டைல் பூங்கா அமைப்பதற்கான திட்டம் 4 ஆண்டுக் காலமாக அரசிடம் நிலுவையில் உள்ளது. இந்த பண்ணாரி அம்மன் டெக்ஸ்டைல் பூங்காவை உடனடியாக அமைக்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டு, எனக்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், புதிதாக அமைத்துத் தரக் கோரியிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்க விதிகளுக்குட்பட்டு, உரிய முன்மொழிவு அனுப்பப்படுமானால் கண்டிப்பாக கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட இரண்டாவது கேள்வி மூலக் கேள்விக்கு தொடர்பில்லாத கேள்வி. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வத்திற்கு மதிப்பளிக்கின்ற வகையில் நான் அதற்கு பதிலளிக்க விரும்புகிறேன். Bannariamman Handloom Silk Dyeing and Weaving Association நிறுவனத்தார் DPR–விரிவான திட்ட அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். அது அரசுக்கு வரப்பெற்றிருக்கிறது. முதற்கட்ட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மைய அரசு, மாநில அரசு, முதலீட்டாளர்கள் ஆகியோரின் பங்களிப்போடு

2021 பிப்ரவரி 5]

Bannariamman Handloom Silk Dyeing and Weaving Association–ன் *வேண்டுகோள் நிறைவேற்றித் தரப்படும். அதற்கான பணிகள், முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு, விரைந்து செய்து கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. நாராயணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

கால்நடை மருத்துவமனை

***72622—திரு. வெ. நாராயணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், வடுகச்சிமதில் ஊராட்சியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், வடுகச்சிமதில் ஊராட்சியில் மாட்டினங்கள் 724 அலகுகளும், ஆட்டினங்கள் 66 அலகுகளும் மற்றும் கோழியினங்கள் 23 அலகுகளும் என அனைத்து அலகுகளையும் சேர்த்து 813 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க குறைந்தபட்சம் 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வடுகச்சிமதில் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.